நடந்துகொண்டால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு குறித்து இன்று அவையில் விவாதிக்கவேண்டும் என்று கேட்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) தற்போது, விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிவிப்புகளை நிறைவேற்றியது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடு) அதுகுறித்து எடுத்துக்கொள்ளப்போகிறேன், உட்காருங்கள்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிவிப்புகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.சி. சந்திரகுமார், ப. பார்த்தசாரதி, தி.மு.க. கட்சியைச் சேர்ந்த திரு. மு.க. ஸ்டாலின், புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். அறிவிப்புக் கொடுத்தவர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள். (குறுக்கீடு) திரு. ப. பார்த்தசாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி சார்பாக பேசப் போகிறார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

[திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திருவாளர்கள் சி. மைக்கேல் ராயப்பன், செ. அருண் பாண்டியன், க. தமிழழகன், டி. சுரேஷ்குமார், க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]